(Tamil)

1095
9/21

9940 — 7 — P

நாட்டில் [illegible]

# தேசபக்தி கீதங்கள்.

27



2940 Tamil

சதாவதானம் தெ. கி. பாவலர் சிடன்

R. B. S. மணியர்ல் எழுதியது.

பிரசுரித்தது:—R. B. S. மணி,

புக்ஸெல்லர் மூர்மார்கெட், சென்னை.

ரிஜிஸ்டர்ட்]  1931.  [விலை அணா 2.

159

NATIONAL ARCHIVES LIBRARY
No. 2940
Date 8.2.72
GOVT. OF INDIA

உ

பாரதமாதா துணை.

# தேசபக்தி கீதங்கள்.

எங்களது திருநாடு என்ற மெட்டில் (பின்வேறு)

வியாபாரம் செய்வதற்கு வந்ததிந்த பூனை-இப்போ
வாதுக்கள்செய்து நம்மையே வாட்டுதிந்த பூனை.

பூனை இதுபூனை-இது-வெள்ளைக்கார பூனை-பெரும்
கொள்ளைக்கார பூனை-நம்மை
கொல்லவந்த பூனை-கெட்ட

வஞ்சகமே நெஞ்சில் கொண்டு-நம்
வாழ்வைக் கெடுக்கும் பூனை.

தொகையரு.

ஆயிரத்து நானூற்று ஆண்டு தொண்ணூ றெட்டில்
ஆனதோர் மேமாதம் தேதி இருபதினில்
ஆங்கிலப் பூனையாம்-வாஸ்கோடிகா மாவும்
அடைந்தனர் கோவா நகர்தன்னிலே.

பாட்டு.

அபுல்பருகி என்றதொரு அழகானதோர் பூனை
ஆண்டு அரசாட்சிசெய்ய அழைத்தது பலசேனை (வி)

ஈஸ்ட்டிண்டியா கம்பெனி என்றேறபடுத்திய பூனை.
இந்தியர்கள் விரல்கள் தன்னை இடஞ்சல் செய்தபூனை.

IMPERIAL RECORDS Department

இங்( )மன்போல் வந்த பூனை-நம்மில்
நமனாய் நின்ற பூனை-இந்து.
நாட்டைக் கெடுத்த பூனை. இப்போ
இந்தியரின் அரசமொன்றே இயப்புகிந்தபூனை.

தொகையறா.

ஆட்டுத்தோலுக் கிடங்கேட்டு
அண்டிவந்ததிந்த பூனை-நம்
நாட்டினில் புகுந்து இப்போ
நர்த்தனம் செய்யுது பூனை.

பாட்டு.

வியாபாரம் அன்றிவேறு செய்யோமென்ற பூனை
தாழ்வாரம் கேட்டு வீடுதன தென்றதப் பூனை (வீ)

தப்புகையெழுத்திடுமே தானே அந்த பூனை
தரணிதனில்தானே பிரபு கிளைவ் என்றதோர் பூனை
நம்மை-துணைவேண்டிய பூனை-இப்போ
துன்பம் செய்யும் பூனை-நம்
தின்பம் வெறுக்கும் பூனை-கருப்
இந்தியரென்றே நம்மை தினம் இகழுகின்ற பூனை.

தொகையறா.

இந்தியர்க்கு சுவீகாரம் இல்லையென்று சொல்லும் பூனை.
இருக்குதென்று மறுசமயம் இயம்பு கின்றதிப்பூனை
சிந்தையின் நோக்கப்படி செப்புதையோ இப்பூனை
சீலாகித்து கேட்டுவிட்டால் சீறுகின்ற பெரும்பூனை

பாட்டு.

நாட்டினில் நம் நாநாவை வெறுத்ததிந்த பூனை
ராணியாம் ஜான்ஸி உயிரைநலங் கெடுத்த பூனை (வீ)

இந்தியரை கொலை செய்யவே இன்னமொரு பூனை
இங்குவந்து சேர்ந்தப்போ நீலனென்ற பூனை.

பெண்களை கேடுசெய்த பூனை-பல
கொடுமை செய்தபூனை-நம்மை
அடிமையென்றபூனை- இந்தியரை
அந்தோ மரத்தில் தூக்கி அழகுபார்த்த பூனை.

தொகையரா.

அன்று பிறந்த சிறு அருமை குழந்தைகளை
கொன்றுதின்ற கொடும் பூனையே
நின்று மாதர் இடைநடுவில் சனியனைதுருத்த
நீசனம் வெள்ளைப்பூனை

பாட்டு.

இருடனே சென்னையிலே சிலையைபெற்ற பூனை.
சீலமான சிருவர்களால் உதைபட்ட தந்தபூனை. (வீ)
அந்தணரை ரத்தத்தில் கை தோய்க்கவைத்த பூனை
அட்டி செய்தோர் தலையை அந்தக்ஷணமே கொன்றபூனை

லாரென்ஸ் என்ற பூனை
லாகூர் கொலைசெய்த பூனை-தினம்
நாழிக்கொருவேஷம் போடும்
நாசக்காரப் பூனை

தொகையரு.

கல்கத்தா காசிமுதல் காபூல்தேசமெல்லாம்
கலவரம் செய்த பூனை

---

K. A. மதுரை முதலியார் பதிப்பித்த தியாகராஜ கீர்த்தனை
1, 2, பாகம் அணா. 0 2 0

கர்னல் என்றபட்டம் பெற்ற கபடநாடக பூனை
சருங்காட்டுப் பூனை இதே.

பாட்டு.

மூல்லாவின் கலகமதை மூட்டிவைத்த பூனை.
அல்லாவின் அமநல்லா அரசழித்தந்த பூனை (வீ)

பஞ்சாபில் வெகுஜனத்தை படுகொலை செய்தபூனை
பாவியென்றே நாமம் பெற்றடயர் என்றதோர் பூனை

மனதில்-மடமை கொண்டபூனை-பெரும்
இடர்கள் செய்தபூனை-நம்மை
சுடவேநின்ற பூனை-அதால்
பாரினிலே இந்திரபட்டம் வாளும்பெற்ற பூனை

தொகையரா.

இல்லாதசட்டமதாம் ரௌலட்டு என்றதையே
இந்தியர்கள் வெறுத்ததாலே.
எல்லாரும் கூடியே ஏகமாய்நிறை வெற்ற
என் விழாமல் சேர்ந்ததாலே.

பாட்டு.

குண்டுகளுள்ளவரையில் கொன்றேனென்ற பூனை
குவலயத்தோர் மறக்கமுடியாதா கொடுமை செய்தபூனை (வீ)

காந்திமகானை கடுஞ்சிறையிலிட்ட பூனை.
காரணங்கள் கேட்டவரை ஜெயிலடைத்த பூனை.

---

எமது ஷண்முகனகாந்த புத்தகசாலையில் 1 பாரம் ½-பாரம் கதை அம்மானை நாடகம் இன்னும் நூதனமான புஸ்தகங்கள் கிடைக்கும் வியாபாரிகளுக்கு விலைசரசமாய் கொடுக்கப்படும்.

கை-ராட்டை வெறுக்கும் பூனை-பெரும்
கேட்டை விளைக்கும் பூனை-நம் [பூனை.
கோட்டைக்குள்ளே குத்து வெட்டை. எழுப்பின தந்த
உப்புசட்டம் செய்தவரை உதைகொடுத்த பூனை
உலகம் போற்றும் காந்தியை உதாசனித்த பூனை
செப்பும் பாலன் வெறுக்கும் பூனை
சிறு பாலகா கர்பூனை
வெள்ளை பரங்கியரென்ற பூனை
பாரரை நாயைப் போலபாரில் அடித்த பூனை

## எஸ். எஸ். வி. தாஸ் பாடிவரும் பாடல்கள்.

ஜெகத் குருபர ஷண்முக மெட்டில் (பின் வேறு.

பல்லவி.

கொடுப்பரெதப்போது சொல்வீர்.
சுயராஜ்யம். (கொ)

அநுபல்லவி.

கடுப்பதும் கையில் வெடி.
எடுப்பதும் காலிற்றளை
தொடுப்பதும் சிறைதந்து
விடுப்பது மாயிருந்தால் (கொ)

சரணம்.

படிப்பதும் அன்னியர் நாட்டை
பிடிப்பதும் கள் சாராயம்

வடிப்பதும் மாறி மாறி
குடிப்பதும் மாயிருந்தால் (கொ)

ஒளிப்பதும். யந்தரங்களை
யளிப்பதும் பூனைக்கண்ணை
விளிப்பதும் பல்லைப்பல்லை
இளிப்பது மாயிருந்தால் (கொ)

வெள்ளையரே கொடிய
கொள்ளையரில் சிலகேஸை
தள்ளுவதும் லஞ்சனைக்கை
கொள்ளுவது மாயிருந்தால் (கொ)

பண்டுக்கும் சிதம்பரம் செய்
தொண்டுக்கும் இலக்ஷன் பார்லி
மெண்டுக்கும் இந்தியாவுக்குமிங்கி
லாண்டுக்கு மாயலைந்தால் (கொ)

## ஆடுராட்டே என்றமெட்டு.

ஓடமாட்டோம் பயந்தோட்டமாட்டோம்-உங்கள்
உதைக்குபயந்தினிமேல் (ஓட)

ஆடுங்கைராட்டிணத்தை சுற்றிடாமல்
அடிமை கொடுப்பவர்பால் அண்டிடாமல்
வாடுமதுக் குடியை விட்டிடாமல்-உங்கள்
வரிக்குபயந்தினிமேல் ஓடமாட்டோம். (ஓ)

ஆசையின் பம்பரத்தலையும் நீங்கள்
அடக்கு முறையிலகப்பட்ட நாங்கள்

---

K. A. மதுரை முதலியார் பதிபித்த K. B. சுந்தரம்பாள்
பாடிய செந்தூர் வேலாண்டி 1, 2, பாகம் அணா 0 3 0

மீசையுள்ளேரெனில் விலகிப்போங்கள்-உங்கள்
வெடிக்குப் பயந்தினிமேல் ஓடமாட்டோம். (ஓ)

பாரவிலே பாலுள்ள பாலும்போச்சு-எங்கள்
பருத்திவிலேயு மிந்தியா பஞ்சமாச்சு.
தீர்வைக்குண்டான சட்டதிட்டபேச்சு-உங்கள்
சிறைக்குபயந்தினிமேல் ஓடமாட்டோம் (ஓ)

தேசமெல்லாம் விளங்கும் சிஷ்யர்சேர்ந்தோம்
சிதம்பரம் சொன்னபடி செய்யநேர்ந்தோம்
ராஜா என்காந்தி சொல்லே, நம்பிவாழ்ந்தோம்-உங்கள்
நடைக்குப்பயந்தினிமேல் ஓடமாட்டோம் (ஓ)

காந்தியே கரன்சந்தர மோகனதாஸ் மெட்டு.

தயார் தயார்
தேசீயதொண்டர் படை (த)

தயங்காமலே சிறைசென்றுமே
சுயராஜ்யம் பெறவே நாங்கள். (த)

சக்ராயுதராட்டினத்தால்-நூற்றதொருவஸ்திரம்
சாரும் அன்யர்சொள்ளையைத் தகப்பதற் கோரஸ்திரம்
சார்ந்ததந்திரம்-மகாத்மா காந்திமந்திரம்.
தயங்கமலே சிறைசென்றுமே சுயராஜ்யம் பெறவேநாங்கள்(

நூற்றியே நாற்பத்திநாலாம்
செக்ஷனைக் கண்டிஞ்சிடோம்

நோக்கியே சுதந்திரகொடி நாட்டாமலிருந்திடோம்
நோன்புகொள்ளுவோம் காங்கரஸ் மான்பு கைவிடோம்

தயங்கமலே சிறைசென்றுமே
சுயராஜ்பம்பெறவே நாங்கள் (த)

வாரண்டு தாளிருப்புகாப்பு மகிமைநாங்களறி குவோம்
வந்தாஸ்டு செய்வரோடு மௌனமாக செல்லுவோம்
வழக்குப்பேசிடோம் போலீஸை எதிர்த்திடோம்
தயங்கமலேசிறை சென்றுமே சுயாரஜீயம்பெறவேநாங்கள்(த)

தனது ஆப்தநன்பரான ஸ்ரீமான்
இராஜாபாதர் செட்டியாரின் குமாரத்தி
காலஞ்சென்ற சௌ

## ஜெயலட்சுமி அம்மாள் பேரில் பாடியது.

காந்திசிறைக்குள் புகுந்தார் என்றமெட்டு.

வாணில்போய் சேர்ந்தனையோ
வருந்த-விட்டு (வா)

மானிலம் புகழாநின்ற
மாதுஜெயாவே உந்தன்
மாதா பிதாவை விட்டு
வாழ்வைத்துறந்து (வா)

தொகையரா.

என்றுநாம் உன்தனைமறு முறைகாண்போம் என
ஏங்குதே நெஞ்ச மையோ
இன்னம் ஓர்முறை உந்தன்புன்நகை
காண்பதற்கு
இச்சையே கொண்டதாலே

பாட்டு எடுப்பு.

மறுபிறப்பினி லாகினும்-எம்முன் வருவாய்
வருத்தங்கள் தீர்த்திடுவாம் (வா)

---

## தாரணியி லன்புகொண்ட என்றமெட்டு.

செல்வமுடன்-வளர்த்த-எங்கள்
ஜெயத்தை காணேமோ
ஜெயத்தை காணேமோ இந்த
ஜெகத்தில் வாழோமோ (செ)

அல்லும் பகலுமாக அலைகிறோம் உனைதேடி
நல்லதோர் உந்தன் மொழியை
நாங்கள் கேட்டிட (செ)

வர்மம் செய்யாதெங்கள் முன்
வந்து உந்தன் தெரிசனமே
தந்திடவேண்டு மென-உன்
தாள்பணிந்தோமோ (செ)

---

## தேய்வபக்தி என்றமெட்டு.

தொண்டுசெய்தே-திருவோம். தேச (தொ)
பண்டுநம் தொழிலாம் ராட்டை
கொண்டு நாம்ஜெயமடைய (தொ)
பாரதத்தோர் பாக்யம் பெற
பாலயர் நாங்கள் பாரததாய் (தொ)

---

K. A. மதுரை முதலியார் பதிபித்த சுந்தராம்பாள் பாடிய மோ
திலால் பாட்டு அவசியம் பார்க்கவும் விலை 0 2 0

பலவித கொடுமைகளும்
பஞ்சம் பிணிவகையும்-ஒழிய (தொ)

தொகையரு.

பாரதபுதல்வாரா பாரினில்வந்த பின்னும்
சோதரர்நாங்கள் அன்றோசோகமே கொள்ளமாட்டோம்
வீரராய் முன்னில்வந்து-தீரமாய் தொண்டு செய்வோம்
பாரததேவி மானம்-பண்புடன் என்றும் கார்ப்போம்

பாட்டு.

ஓதும்காந்திசொல்லை உறுதியாய் பிடிப்போம்
ஒத்துழையா சட்டமுறைப்படி நடப்போம்
ஏதுவந்தபோதும் எதிர்கொள்ள நிற்போம்
ஏழைபாலன் சொல்லை இனிதுடன் படிப்போம் (தொ)

## சிதம்பரம் போகமல் என்றமெட்டு.

பல்லவி.

சுதந்திரம் இல்லாமல் இருப்போமோ எங்கள்
சோதரர் மாளவும்-சகிப்போமோ (சு)

அநுபல்லவி.

பாரததேவியின்-பால்யர்கள் மூவர்
கோரமாய் மாண்டதோர் கொடுமைகள் மீளவும் (சு)

சரணம்.

வீரவாழ்வேயன்றி-வேறொன்றும் வேண்டிலோம்
தீரமாய்தேசிய தொண்டதை செய்குவோம் (சு)
சத்தியாக்ரம் செய்குவோம்
சபர்மதியைக் கைவிடோம்
உத்தமர் காந்திசொல்லை உறுதியாய் பிடிப்போம் (சு)

## தாரணியிலன்பு கொண்ட என்றமெட்டு.

பல்லவி.

தாய்நாட்டின் தொண்டுசெய்ய
தாமதமேனோ-ஐயா (தா)

அநுபல்லவி.

தாமதமேனோ-செய்தல் நீதிதானோ (தா)

சரணம்

பேய்நாட்டார் வெள்ளையர்கள்
பிழைக்கவே வந்தவர்கள்
நாய்போலவே நம்மையே
நடத்துகின்றார்கள்-ஆதலால் (தா)

பாரினி லிலாததொரு பாழானசட்டமதால்
பாரதர் மூவர்உயிரை பாழ்செய்ததினால் (தா)

பகவத்சிங் சுகதேவர் பால்யர்ராஜ குருவும்
ஆகமே அழிந்ததிந்த ஆங்கிலேயரால் (தா)

ஒத்துழையா நியமம் வேண்டும்
உப்புசட்டம் ஒழியவேண்டும்
உத்தமர் நம்காந்திசொல்லும்
ஒற்றுமையுடன் (தா)

பாவலர் மெச்சும்பாலன்—பாரததாயின் சேயன்
பண்பாகபாடினேன் உம்பாதம்
வேண்டினேன்-நீரே (தா)

---

K. A. மதுரை முதலியார் பதிப்பித்த திடில்புளுகள்
விலை அணா 0 6 0

## இதுதானோ தில்லை ஸ்தலம் என்றமெட்டு.

பல்லவி.

இதுநீதியாமோ சொல்வீர்
இளைஞரை ஏனோகொன்றீர் (இது)

அநுபல்லவி.

சதியென்ன செய்தாரென்று
சாற்றிடுவீரே இன்று (இது)

சரணம்.

பெற்றதாய் தொண்டுசெய்தல்
குற்றமோ சொல்லிடுவீர்
சற்றும் தயங்காமூவர்
தானுயிர் மாளச்செய்தீர் (இது)
நாட்டின் சுதந்திரமே
காட்டும் சுயராஜ்பமே
கேட்டும் தொண்டாற்றுவிடில்
கேவலமென்றே செய்வார். (இது)

## (பழநிநாதன் பரபிர்மாண என்றமெட்டு

பல்லவி.

ஸ்ரீமகாத்மா காந்திசந்யாசி (ஸ்ரீ)

அநுபல்லவி.

தினம் தினம் ஜெகம் புகழ்ந்திடும் (ஸ்ரீ)
செந்தேன் மொழியெனப்புகல
வந்தே மாதரம் எனச்சொல்லவந்த (ஸ்ரீ)
சீப்பு கண்ணாடி சோப்புகள்விற்று சீவிக்கும்
எப்புக்கார வெள்ளைக்காரர்க்கு மஞ்சாத (ஸ்ரீ)

திண்முண்டாய் பாய்ந்திடும் பீரங்கி
குண்டுகளைகண்டிஞ்சிடாத
பண்டுதொழில் ஆகியராட்டை
கொண்டுஜெயமடைவோம் என்றுசொன்ன (ஸ்ரீ)

சரணம்.

நாமெல்லாரும் ஒன்ருய்கூடி
நாடுவோம் ஷண்முகரை
பாடுவோம் தினம்-கொண்டாடுவோம் (ஸ்ரீ)

## நாதசங்கீத என்றமெட்டு

மங்கள குணதிருமணி மகுடம்
மாபுகழ்வளர் மகாத்மா மணியே
திங்கள் சொருபமான திவ்யதிடா
தீர்க்காயுள் பெற்றஅருள் தேசமன்னேய்
தீரமூர்த்தி தீரமூர்த்தி
தேசை சேவைபுரியும் தீரமூர்த்தி (ம)
பாரதநாடுபடும் பாடறிந்தே
பகவான் மனமிறங்கி பாக்கியமாய்
வீரர் மகாத்மாகாந்தி யெனவே
வின்னுலகனுப்பவந்த வேத குரு
விற்பனமே விற்பனமே
விகசித மிகஉயர் விற்பனமே (ம)
புண்ணிய தவநிலே பூசூர்சீர்
புந்திமகிழ்ந்தேன் மகிழ்புங்கவரே

சுயராஜயப்பாட்டு 1, 2, 3, பாகம் அவசியம் பார்க்கவும் விலை 0 2 0.

கண்ணிய மிகும்கதர் காதலுற
காசினியோரணிய-கருத்திலுய்ய
காந்தி அடிகள் காந்தி அடிகள்
கருணையுங்கடலெனும் காந்தியடிகள் (ம)

## கதர்பாட்டு.

வாங்கிடுவீர் கதருடையை
வாழ்வுறும் சகோதரரே
ஓங்கி சுய ஆட்சி
ஒத்துழையா - மாட்சி
உத்தம வர்த்தகர் வந்தாரிடந்தனிலே (வா)

ஆதியில் முன்னோர்களெல்லாம்
அணிந்ததுவும் இவ்வுடையே
பாதியிலே - நாமே
பரிகொடுத் தோமே
பஞ்சப்பிரபஞ்சத்தில் வஞ்சகமிஞ்சுவதால் (வா)

சீமைவெள்ளையர் துணியை
சேர்ப்பதுவும் வீண்சிலவே
க்ஷேமமென்ப தில்லை
சேரவரும் தொல்லை
சிந்தையிலெண்ணியே விந்தையாய்க்யாதி பெற (வா)

கழுகுமலை குருவிகுளம் எடுப்பு-பின்வெறு

வெண்பருத்தி விதை விதைத்து
பாரத பூமியிலே

வேணபஞ்சு சேகரித்து
வேண்டும் நூலை நூற்க
மீண்டும் வேலைபார்க்க
சுற்றவேண்டும் ராட்டு சுற்றவேண்டும் (வெ)

கோட்டையிலே கொடிபறக்க
எங்கள்காந்திமகான்
கொண்ட எண்ணப்படி சிறக்க
கோடாகோடி கதர்
ஆடைதரிக்கவே நாம்
சுற்றவேண்டும் ராட்டு சுற்றவேண்டும் (வெ)

ஆதியிலே செய்தவேலை நம்
ஜாதியிலே முன்னோரிதை
பாதியிலே விட்டதாலே
பக்தியுடன் கொண்டு
யுக்தியுடன் நின்று
சுற்றவேண்டும் ராட்டுசுற்ற வேண்டும் (வெ)

---

## சு. ச. சங்கரலிங்ககவிராயர்பாடியது

இந்தியர்தாயின் சகோதரர் நமக்
கின்னம் வேற்றுமையா (இ)

சொந்தவர்த்தகம் கைத்தொழில் விடுத்து
தூரதேசத்து துஷ்டரை அடுத்து
சொந்தமான பொருள்தனைக் கொடுத்து
சோற்றுக்கலைவதேன் சொல்லுவீர் எடுத்து (இ)

---

கணவர்மனைவியர் காதல் ஒழுக்கம் (அல்லது)
சிற்றின்ப வெற்றி விலை ரூ. 2 4 0

எந்தவஸ்த்து நம்தேசத்திலில்லை
எண்ணிப்பார்க்க நமக்கேமதியில்லை
வந்த ஆங்கிலர்மன்னர் தந்தருளே
வாங்கிவைத்துக் கொண்டோம்
இதுவோ நம்வேலை (இ)
ஜாதிமத வித்தியாசத்தினாலே
தன்மையிழந்தோமித் தேசத்தின் மேலே
ஓது மகாத்மா காந்திசொல்போல
ஒத்துழைப்போம் காரியசித்தியதனாலே (இ)
சத்தியாகரமே சுய ஆட்சி
சாற்றும் கைத்தரி ராட்டிணகாட்சி
சத்திய கதராடையின் சூட்சி
சங்கரலிங்க சங்கீதமே சாட்சி (இ)

தேசபக்தி கீதங்கள்

முற்றிற்று.

தேசபக்தி கீதங்கள் இரண்டாம் பாகம்
அவசியம் பார்க்கவும்.

சதாவதானம் T K பாவலர் எழுதிய
பதிபக்தி அ 8. கதர்பக்தி அ 8. பாம்பேமெயில் அ 8.
R. B. S. மணி புக்ஸெல்லர்
மூர்மார்கெட் சென்னை.

ஸ்ரீ வேதவல்லிபிரஸ் நெ. 1 கவரைத்தெருவு, ஜூளபோஸ்ட்டு மதராஸ்.

**வெளிவந்து விட்டது!!** **வெளிவந்து விட்டது!!**

காமநூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்பவருக்கு உண்மையான 16. லீலா விநோத படங்களுடன் கூடிய கொக்கோகநூல் வெளிவந்து விட்டது.

# கொக்கோகம்.



இதில் காம உர்பத்தி காதலர்பெருமை ஆண் பெண் ஜனனேந்திரியங்கள் பெண்கள் தேக அமைப்பு அவைகளின் லட்சணங்கள் மாதாவிடாய்மர்மம அமுர்தநிலை படுக்கரை நுட்பங்கள் இன்பத்தின் லட்சியம் இன்பகாலத்தில் நிகழுவதென்ன சம்போகத்திற்கு தயாராகுதல் இன்பமனுபவிக்கவேண்டிய நிலைமை இதில் காம இச்சை காமத்தால் எற்படும் தீமைகள் சம்போகம் செய்யவேண்டிய கிரமம் எங்கும் காணாத சிற்றின்பமர்மங்களும் சரசசல்லாப நுட்பங்களும் உண்மையாக இன்பத்தை அடையவேண்டிய மர்மங்களும் இன்னும் இதைப்போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள் இதில் காணலாம் மற்றப் போலிப்புத்தகங்கள் போல் அல்ல இதில் 16-லீலா விநோதப்படங்களுடன் அழகிய தாளில் சலிகோபயிண்டு செய்து தயாராகயிருக்கிறது. இதன் விலை ரூபா 1—0—0

## பூலோகரகசிய (மெனும்)

# மதிமோசக் களஞ்ஜியம்.

இதில் அடங்கிறவிஷயங்கள் தெய்வபிரார்த்தனை மோசம் ஜவுளிக்கடை மோசம். அரிசி வியாபார மோசம். மூர்மார்கட் சன்னியாசிகள், தேவடியாள் மோசம், தட்டுவாணி சிறுக்கிகள் மார்வாடி, சாராயக்கடை, ஈட்டிக்காரர், திருப்பதிக்கு போகும் உத்தியோகஸ்தர் மோசம், ஜாலம் செய்பவர் குடுகுடுப்பைகாரர், பெருமாள் மாட்டுக்காரர். பகல் கூத்தாடிகள் மைபொட்டு திருடுபிடிக்கும் மோசம், போலிக்கவிராய வித்வபாவல நாவல் பண்டிதபுலவர்கள், மடாதிபதிகள் அடாத மோசம். வெண்பா விருத்தம் கலித்துறை பதிகங்களோடு ஆங்காங்கு ஐதீகபடத்துடன் செந்தமிழ் நடையில் வசன காவியமாக எழுதி முடித்திருக்கிறது 2 பாகம் சொற்பகாப்பிகளே யிருக்கின்றது. விலை ரூபா 2—0—0

R. B. S. மணி, புக்ஸெல்லர் மூர்மார்கெட் சென்னை.

---

...ட்டல்பேஜ் மாத்திரம் மெர்சன்ட்ஸ் பிரஸ், பி. டி. மதனூஸ்.